අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

## வினாத்தாள் I,II



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 87 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

**தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்- I**

**கவனிக்க.**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. இலங்கையில் வெளிவந்த முதலாவது பதிவு செய்யப்பட்ட சிங்களப் பத்திரிகை
   i. கொழும்பு ஜேர்னல் ii. உதயதாரகை
   iii. லக்மினபஹன iv. இலங்காகுரோகய

2. இலங்கையின் முதன் முதலான பிராந்திய ஒலிபரப்பு சேவை
   i. இராஜரட்டை ii. ருஹீணு
   iii. வயம்ப iv. நுவர

3. இலங்கையின் ஊடக உரிமையாண்மையின் இரண்டு முக்கிய வகைகள் யாவை?
   i. அரசாங்கம் மற்றும் பகுதியளவு அரசுடமைச் சேவைகள்
   ii. கம்பனிகள் மற்றும் தனியாட்கள்
   iii. குடும்பங்கள் மற்றும் அரசாங்கம்
   iv. அரசாங்கம் மற்றும் தனியார்

4. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டும் நிதியுதவியளித்த நாடும் முறையே குறிப்பது.
   i. 1979, கட்டார் ii. 1982 யப்பான்
   iii. 1924, ஜேர்மனி iv. 1988, இந்தியா

5. “எல்லா உத்வேகமான புதினங்களும் செய்திகளே என்ற கருத்தினை முன்வைத்த அறிஞர்.
   i. போல் டீ.மெசூனியர் ii. கப்ரியல் ஸ்கேத்
   iii. மில்ட்டன் பிரஷ் iv. சார்ள்ஸ் அண்டர்ஸன் டானா

6. கொவிட் பெருந் தொற்றுக்காலத்தில், ரினுஷா கடையை நோக்கிச் சென்றாள். அவள் தனக்கு முன்னால் பொலிஸ் அதிகாரிகளைக் கண்டதும் முகக்கவசத்தை உடனடியாக சரிசெய்து கொண்டாள். இந்த நடத்தைக்கு அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை.
   i. ஆளுள் தொடர்பாடலாகும் ii. குழுத்தொடர்பாடலாகும்
   iii. காட்சித் தொடர்பாடலாகும் iv. வாய்மொழிசாராத் தொடர்பாடல்

7. இலங்கையின் முதலாவது சிங்கள சஞ்சிகை

i. சிங்கள பௌத்தய
ii. தினமின
iii. ஞானார்ந்த பிரதீபாயா
iv. மாசிகதெக்க

8. இலங்கையில் வெளிவருகின்ற அதிகூடியளவு வாசகர்களினை தன்னகத்தே கொண்டிருக்கின்ற பத்திரிகை

i. டப்லொயிட் அளவானதாகும்
ii. புரோட்சீட் அளவானதாகும்
iii. பேளினர் அளவானதாகும்
iv. கொம்பெக்ட் அளவானதாகும்

9. செய்திப் பத்திரிகையொன்றின் பிரதி செம்மையாக்கலில், கூடிய பொறுப்புடமையைக் கொண்டிருப்பவர்.

i. பிரதம ஆசிரியர்
ii. செய்தி ஆசிரியர்
iii. உதவி ஆசிரியர்
iv. ஒப்புநோக்குநர் அல்லது மெய்ப்புத்திருத்துநர்

10. வன்செய்திகள் பெரும்பாலும் காணக்கிடைக்கும் பகுதி

i. முதற் பக்கத்திலாகும்
ii. நடுப்பக்கத்திலாகும்
iii. இறுதிப்பக்கத்திலாகும்
iv. தெரிவுசெய்யப்பட்ட பக்கத்திலாகும்

11. புதிய ஊடக வகைகள் கொண்ட தொகுதியை தெரிவுசெய்க.

i. செய்திப்பத்திரிகை, குறுஞ்செய்தி, சமூகஊடகம்
ii. தொலைக்காட்சி , குறுஞ்செய்தி , வானொலி
iii. இணையச் செய்திப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி
iv. இணையச் செய்திப்பத்திரிகை, இணைய வானொலி , சமூக ஊடகம்

12. ஆண் -பெண் சமூகத்தன்மை எனும் எண்ணக்கருவானது

i. பாரம்பரியம் சார்ந்ததாகும்
ii. சமூகவிஞ்ஞானம் சார்ந்ததாகும்
iii. உயிரியல் சார்ந்ததாகும்
iv. உளவியல் சார்ந்ததாகும்

13. ஹரோல் டி.லாஸ்வெல்லின் தொடர்பாடல் குறித்த வரைவிலக்கணம் தொடர்பிலான தவறான கூற்று

i. தொழில்நுட்ப இடையூறுகளால் செய்தி பாதிக்கப்படுதல்
ii. தொடர்பாடுநர் அதிக முக்கியத்துவத்தை பெறுதல்
iii. செய்தியானது பெறுநரிடம் மாற்றத்தை ஏற்படுத்தல்
iv. எப்போதும் ஒருவழித் தொடர்பாடலே நடப்பதாக இருத்தல்

14. ஆட்களிடைத் தொடர்பாடலின் சிறப்பு

i. வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படுவது
ii. ஒருவரினுள்ளான தொடர்பாடல் வகை
iii. சிறு குழுவை இணைக்கப் பயன்படுவது
iv. பின்னூட்டத்தை தவறாது பின்பற்றுவது.

15. அஸ்வினி தொலைக்காட்சி ஊடகத்தினை பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது திடிரென அலைவரிசைகள் குழம்பிக் காணப்பட்டிருந்தன. இச்சூழலை அடையாளப்படுத்துவது

i. மொழிசார் இடையூறு
ii. காட்சிப்புல இடையூறு
iii. ஊடக இடையூறு
iv. தொழினுட்ப இடையூறு

*16.* பொதுச்சேவை ஊடகத்தின் குறிக்கோளாக அமைவது

i. பெருந்தொகைப் பெறுநர்களைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பது

ii. கல்வி மற்றும் அபிவிருத்தி பற்றிய தகவல்களை வழங்குவது.

iii. கொரோனா பற்றிய தகவல்களினை வழங்காதிருத்தல்

iv. அனுசரனை பெற்று ஒலி - ஒளி பரப்பு நிகழ்ச்சிகளை வழங்குவது

*17.* சுதந்திர தினத்தில் ஒளிபரப்புச் செய்வதற்கு தொலைக்காட்சி நாடகமொன்றை உருவாக்குவதற்கு உங்கள் பாடசாலை நாடகப்பிரிவுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதற்கு பொருத்தமான தொலைக்காட்சி நாடகவகை.

i. ஓரங்க நாடகமாகும் ii. ஆற்றுகை நாடகமாகும்

iii. பல்வகை அம்சங்களினை உடைய நாடகமாகும் iv. மெகா நாடகமாகும்

*18.* திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பின் போது ஒப்பனை, ஆடை அணிகள், அரங்க அமைப்பு என்பவற்றை தொடர்ந்து பேணுவதற்கு மிகவும் பயன்படக் கூடியது.

i. நிலைத்த புகைப்படக்கலை ii. படத்தொகுப்பு

iii. இயக்குநரின் வகிபாகம் iv. எழுத்துருவின் தெரிவு

*19.* நிகழ்ச்சி ஒன்றினை ஒலிபரப்பும் போது புவியியல் எல்லை பற்றி குறைந்தளவு கவனம் செலுத்துவது.

i. டிஜிற்றல் வானொலியில் ஆகும் ii. சமூக வானொலியில் ஆகும்

iii. பண்பலை வானொலியில் ஆகும் iv. இணைய வானொலியில் ஆகும்

*20.* பஸ் நிலையமொன்றில் பஸ்ஸிற்காக காத்திருக்கும் பயணிகள் குழுவொன்றினிடையே நடைபெறக்கூடிய தொடர்பாடல்.

i. ஆட்களிடைத் தொடர்பாடல் ii. முறைசார் தொடர்பாடல்

iii. முறைசாராத் தொடர்பாடல் iv. ஆளுள் அல்லது தனியாள் தொடர்பாடல்

*21.* ஒருவரிடமிருந்து ஆரம்பிக்கும் தொடர்பாடலானது இன்னொருவருக்கும் அவரிடமிருந்து ஏனையவர்களுக்கும் சென்று தகவலானது மீண்டும் தொடர்பாடுநருக்கே சென்றடைகின்றது. இச் சூழலை அடையாளப்படுத்தும் மாதிரி.

i. சங்கிலி மாதிரி ii. வட்டவடிவ மாதிரி

iii. சக்கர மாதிரி iv. Y மாதிரி

*22.* சனநாயக சமூகமொன்றில் பிரஜை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய இயல்புகளுடன் பொருந்தாத கூற்று.

i. சனநாயக வாதியாக வாழுதல்

ii. அனைத்து மதங்களையும் அனைத்து இனத்தவர்களையும் நேசித்தல்

iii. சமூக நற்காரியங்களை மேற்கொள்ளாதிருத்தல்

iv. வரி செலுத்துதல் மற்றும் வாக்குரிமையை பயன்படுத்துதல்

*23.* நிலைத்த புகைப்படக் கலையின் இயல்புகள் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

பிரணவி : இயற்கைத்தன்மை காணப்படுவதால் நம்பிக்கை ஊட்டக்கூடியது

விதுரா : எவராலும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியது

டனிஸ்ரா : கருத்துக்களை கவரும் தன்மையுடன் முன்வைத்தல்

மனிஸ்ரா : இலகுவில் அச்சுத் தொழிநுட்பத்தை பயன்படுத்த முடியாது.

இக் கருத்தியல்களில் சரியான கருத்துக்களினை முன்வைத்தோர்.

i. பிரணவி, விதுரா ஆகியோர் மட்டும்

ii. பிரணவி, டனிஸ்ரா ஆகியோர் மட்டும்

iii. விதுரா, டனிஸ்ரா, மனிஸ்ரா ஆகியோர் மட்டும்

iv. பிரணவி, விதுரா, டனிஸ்ரா ஆகியோர் மட்டும்

*24.* தொடர்பாடலினை வகைப்படுத்துவதற்கு அடிப்படை அம்சமாக பயன்படுத்தப்பட்டது.

i. சூழல்

ii. பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை

iii. தொடர்பாடல் திறன்

iv. வழிமுறை

*25.* அச்சிடல் தொழினுட்ப வளர்ச்சியில் நவீன அச்சியந்திரத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவரும் முதலில் அச்சடிக்கப்பட்ட நூலும் முறையே

i. ஜொஹானஸ் கூட்டன் பேர்க், இலத்தீன் இலக்கணம்

ii. ஆறுமுக நாவலர், வேதாகமம் (பைபிள்)

iii. வீரமாமுனிவர், தேம்பவானி

iv. கண்ணதாசன், இயேசு காவியம்

*26.* குழுவுக்கும் தொடர்பாடுநருக்கும் இடையிலான உறவுநிலை குறைந்தளவில் வெளிப்படுத்தப்படுவது

i. செயலமர்வு ஒன்றின் அறிவுறுத்துநரால்

ii. கூட்டமைப்பு ஒன்றின் தலைவரால்

iii. ஆசிரியர் பீடமொன்றின் பிரதம ஆசிரியரால்

iv. மருத்துவ சிகிச்சை நிலையமொன்றின் நோயாளியால்

*27.* பின்வரும் கூற்றை அவதானித்து,

A - ஆக்கியோனின் அடையாளத்துடன் தொடர்புடையவை ஆகும்.

B - தேவையாயின் கைமாற்றம் செய்யப்பட முடியும்

C - நிதிசார் ஆதாயங்களினை பெற்றுத்தரும்

D - சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாதவையாகும்

புலமைச் சொத்து சட்டத்துடன் மிகவும் தொடர்புள்ள கருத்தினை முன்வைப்பது.

i. A மட்டும்

ii. B மட்டும்

iii. C மட்டும்

iv. D மட்டும்

*28.* செய்திப்பத்திரிகை விளம்பரங்கள் பற்றிய தவறான கூற்றினை தெரிவு செய்க.


i. நிறுவனத்தின் நாளாந்த செலவுகள் மற்றும் பராமரிப்பு விளம்பரங்களில் தங்கியுள்ளது

ii. நாளாந்த செய்திப்பத்திரிகை திட்டமிடல் அமைப்பொழுங்கில் விளம்பரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

iii. செய்திகளுடன் ஒப்பிடும் போது விளம்பரங்களுக்கு குறைந்த இடமே ஒதுக்கப்படுகின்றது.

iv. செய்திப்பத்திரிகை உள்ளடக்கத்தில் வேறுபட்ட வழிகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு விளம்பரதாரர்களுக்கு வாய்ப்புகளுண்டு.

படத்தில் காட்டப்படிருப்து செய்திப் பத்திரிகை ஒன்றின் செய்தி அறிக்கையுடன் தொடர்புடைய தலைகீழ் பிரமிட் ஆகும். இப்படத்தினை பயன்படுத்தி 29,30 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.




**29.** இப் பிரமிட்டில், செய்தி பற்றிய 5W+1H தொடர்புபடுகின்ற விடயங்கள் உள்ளடங்குவது

i. A யிலாகும் ii. A.B யிலாகும்

iii. C யிலாகும் iv. B,C யிலாகும்

**30.** செய்திப்பத்திரிகையில் வெளி தொடர்பான சிக்கல் ஏற்படும் போது ஆசிரியரால் நீக்கப்படுவதற்கு அதிகளவில் சாத்தியம் காணப்படுவது

i. A ஆகும் ii. B ஆகும்

iii. A,B ஆகும் iv. C ஆகும்

**31.** பின்வருவனவற்றுள் ஆசிரியர் உரிமைத்துவப் பத்திரிகைகளினை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி

i. கவட்டகத்தியா, லங்காலோகய, லக்மின பஹன

ii. லகமினி பஹன, உதயதாரகை, தினமின

iii. கவட்டகத்தியா, உதயதாரகை, தினமின

iv. சிங்கள பௌத்தயா, இந்து சாதனம், தினக்குரல்

**32.** வெகுசன ஊடகங்கள் குறித்து ஊடக மாணவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

A - பணம் கொடுத்து பெறுமிடத்து உரிமையை அனுபவிக்கமுடியும்

B - ஆவணப்படுத்தி நீண்டகாலம் வைத்திருக்கமுடியும்

C - உடனுக்குடன் தகவல்களினை பெற்றுக் கொள்ள முடியும்

D - புகைப்படங்கள் கேலிச்சித்திரங்கள் காட்சியை ஏற்படுத்தக்கூடியன

இக் கூற்றுக்களில் பத்திரிகை ஊடகங்கள் தொடர்பில் கருத்துக்களினை முன்வைத்தவர்கள்

i. A,B உண்மையாவதோடு C,D உண்மை

ii. A.B பொய்யாவதோடு C, D உண்மை ஆகும்.

iii. A,B,C அகியன உண்மையாவதோடு D பொய்

iv. A,B,D உண்மையாவதோடு C பொய் ஆகும்.

**33.** பின்வரும் கூற்றுக்களினை கருத்தில் கொள்க.

ஜெனி - பெறுநரின் நடத்தையை மாற்றுகின்றது

வினி - தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை கட்டுப்படுத்துகின்றது

கனி - பெறுநரின் எண்ணங்களையும் உளப்பாங்குகளையும் கட்டுப்படுத்துகின்றது

சுனி - பெறுநர்களின் துலங்கல்களினை கருத்தில் கொள்கிறது.

மேற்குறித்த கூற்றுக்களில் ஊடகங்கள் பெறுநர்களிடம் கொண்டுள்ள விளைவுகளினை காட்டுபவை

i. ஜெனி, வினி, ஆகியோர் மாத்திரம்

ii. ஜெனி, வினி, மற்றும் கனி ஆகியோர் மாத்திரம்

iii. கனி மற்றும் சுனி ஆகியோர் மாத்திரம்

iv. சுனி, கனி, மற்றும் வினி ஆகியோர் மாத்திரம்

*34.* தொலைக்காட்சி செய்தி சுற்றறிக்கையிடல் பற்றி வகுப்பறையில் மாணவர்கள் வெளியிட்ட பார்வைகள் கீழே தரப்படுகின்றது.

A - அறிக்கையிடப்படும் நிகழ்வு பற்றிய நம்பகத்தன்மை காட்சிப்படுத்தப்படும் படங்களில் தங்கியுள்ளது.

B - அது தனக்கே உரித்தான அறிக்கை முறையை கொண்டுள்ளது.

C - அலைவரிசைகளின் கொள்கைகளால் செய்திகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் தன்மை தீர்மானிக்கப்படமுடியும்

D - செய்தியை அளிக்கை செய்பவரின் உடல் மொழியும் பண்புகளும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது மிக முக்கியமானதாகும்.

இவற்றில் சரியான கூற்றுக்கள் வெளியிடப்பட்டது

i. A மற்றும் B ஆகியோரால்

ii. C மற்றும் D ஆகியோரால்

iii. A,B மற்றும் C ஆகியோரால்

iv. A,B,C மற்றும் D ஆகியோரால்

*35.* ஜோன் லொஜிபெயார்ட், ஜொஹானஸ் கூட்டன்பேர்க், குக்லியஸ்மா மார்க்கோணி, சார்ளி சப்ளின், ஆகியோர் முறையே தொடர்புபடுவது.

i. வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, சினிமா ஆகியவற்றுடன்

ii. தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகை, சினிமா ஆகியவற்றுடன்

iii. தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, வானொலி, சினிமா ஆகியவற்றுடன்

iv. தொலைக்காட்சி, சினிமா, செய்திப்பத்திரிகை, வானொலி ஆகியவற்றுடன்.

*36.* வானொலி ஊடகத்தின் மட்டுப்பாடுகள் அல்லது வரையறைகளுடன் தொடர்புபடும் கூற்று அல்லாதது.

i. வானொலி ஒலியை மட்டும் அடிப்படையாகக் கொண்டது

ii. வானொலியை பலமுறை மீண்டும் செவிமடுக்க இயலும்

iii. ஆழமான கருத்துக்களினை வானொலி ஊடாகப் பெறமுடியாது

iv. செவிமடுப்போரின் கவனம் திசைதிரும்பக் கூடிய நிலைகள் காணப்படும்.

*37.* உலகின் முதலாவது எறிவை ஊடகத்தினையும் அதனை அறிமுகம் செய்தவரையும் குறிப்பது.

i. மெஜிக் எறியக் கண்ணாடி எத்தனேசியஸ் கிரேச்சர்

ii. மேந்தலை எறிவை றொஜர் அப்பல்டொன்

iii. மெஜிக் லென்ரன் பெந்தஸ் மெமோரியா

iv. சலனமில்லாத புகைப்படம் ஜோர்ஜ் ஈஸ்ட்மன்

*38.* உலக தொலைக்காட்சி தினமாக கொண்டாடப்படும் நாள்?

i. டிசம்பர் *16*

ii. நவம்பர் *21*

iii. மே *03*

iv. ஜனவரி *08*

*39.* தொலைக்காட்சி, சினிமா ஆகிய ஊடகங்களுடன் தொடர்புபடக் கூடிய படைப்பாக்க ரீதியான விதிகள்

i. மொழிசார் வெளியீட் விதிகள்
ii. கட்புல செவிப்புல வெளியீட்டு விதிகள்
iii. கட்புல வெளியீட்டு விதிகள்
iv. செவிப்புல வெளியீட்டு விதிகள்

*40.* புகைப்படச் சுருள்களை பயன்படுத்தும் கமராக்களை கையாளும் போது படலவேகம் (Film Speed) மிகவும் முக்கியமானதாகும். இதனால் உணர்த்தப்படுவது.

i. ஒளியை உணரும் திறனாகும்

ii. துரிதமாக படங்களை எடுக்கும் திறனாகும்

iii. துரிதமாக குவியப்படுத்தும் திறனாகும்.

iv. வில்லைகளைத் துரிதமாக மாற்றக்கூடிய திறனாகும்.

**

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 87 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்- II

**கவனிக்க.**

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களினையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கும் மாத்திரம் விடை எழுதுக.

* **முதலாம்** வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களிற்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1. புதிதாக உருவாக்கப்பட்ட சமூக ஊடகமான புலனம் (Whatsapp) குழுவில் இணைந்து கொண்ட சௌமி, அதனூடாக பல்வேறு விதமான மின்னிதழ்களினை பெற்றுக்கொள்ள முடிகின்றது. என்றுதனது நண்பியிடம் தெரிவித்தார்.

   i. பெரும்பாலான மக்களால் பயன்படுத்தப்படுகின்ற செவிப்புல மற்றும் கட்புல - செவிப்புல ஊடக வடிவங்கள் இரண்டினை பெயரிடுக.

   ii. மேற்குறித்த ஊடகவகைகளின் பெறுநர்களினை குறிப்பிடக்கூடிய பதங்களினை முறையே குறிப்பிடுக.

   iii. மின்னிதழ்களினை போலன்றி அச்சிடப்படும் பத்திரிகைகள் அளவுரீதியாக இரண்டு வகையாக வகைப்படுத்தலாம். அவ்விரு வகைகளும் எவை?

   iv. சௌமி இணைய வசதி கொண்ட தனது திறன் கைத்தொலைபேசியில் தகவல்களினை பரிமாற்றுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகங்கள் இரண்டினை குறிப்பிடுக.

   v. இலத்திரனியல் பத்திரிகையின் பொதுவான குண இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

   vi. செய்திப்பத்திரிகையில் புகைப்படங்களினை பிரசுரிக்கும் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் இரண்டினை குறிப்பிடுக.

   vii. செய்தி பத்திரிகை அறிக்கையிடலில் "கருப்பொருளை" அறிமுகம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் பதம் யாது?

   viii. செய்திப் பத்திரிகை உள்ளடங்கும் தொடர்பாடல் வகைக்குரிய, குறிக்கப்பட்ட கால இடைவெளிகளில் வெளியிடப்படுகின்ற வேறு ஊடகம் ஒன்றினை பெயரிடுக.

   ix. சௌமி தனது நண்பர்களுக்கு இடையிலான செய்திப்பரிமாற்றத்தில் பேச்சு மற்றும் எழுத்து ஆகிய இரண்டினையும் பயன்படுத்தினாள் மொழியின் இந்த அம்சம் எவ்வாறு அழைக்கப்படும்.

   x. பத்திரிகையில் உள்ளடங்கும் விடயங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை ஆகும். அவ்வாறு பத்திரிகையில் உள்ளடங்கும் அம்சங்கள் இரண்டினை பெயரிடுக.

( 2 x 10 = 20 புள்ளிகள்)

*2.*

i. வீதிகளில் செல்லும் வாகனங்களினை அவதானிப்பதற்காக சந்திகளில் பொருத்தப்படும் கமரா அமைப்புக்களினை அடையாளம் காண பயன்படுத்தப்படும் பதம் எது?

ii. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள ஊடகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் இரண்டு நிறுவனங்களினை பெயரிட்டு அவை ஒவ்வொன்றும் ஒழுங்குபடுத்தும் வெகுசன ஊடக வகையை குறிப்பிடுக.

iii. வெகுசன ஊடக உரிமையாண்மையின் இரண்டு பிரதான வகைகளினையும் குறிப்பிட்டு ஒவ்வொரு வகைகளிலும் உள்ளடங்குகின்ற தொலைக்காட்சி, வானொலி சேவைகள் தலா இரண்டினைக் குறிப்பிடுக.

iv. வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய எறிவை சாரா ஊடக உபகரணங்கள் இரண்டினைக் குறிப்பிடு விளக்குக.

*3.* கமலி மற்றும் அமலி ஆகிய இருவரும் இணைபிரியாத நண்பர்கள். கமலி புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு ஒன்றில் தனது படிப்பினை மேற்கொண்டு வருபவர் ஆவர்.

i. மேற்குறித்த இருவரும் தொலைபேசி வாயிலாக தமது தொடர்புகளை வலுவாக பேணிக் கொள்கின்றனர். இச் செயற்பாடு எவ்வகைத் தொடர்பாடலுக்குரியது.

ii. தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

iii. குழுத்தொடர்பாடலின் இயல்பை மூன்று முக்கிய குறிப்புக்கள் வழியாக சுருக்கமாக விபரிக்குக.

iv. கமலி வெளிநாட்டிலிருந்தவாறே எமது நாட்டு பத்திரிகைகளினை புதிய ஊடகங்கள் வாயிலாகப் பெறுகை செய்கின்றார். வெகுசன ஊடகங்களிற்கும் புதிய ஊடகங்களிற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினை ஒப்பிட்டு பரிசோதிக்குக.

*4.* புதிய அறிமுக நிலை தொடர்பாடுநர்களினை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வானொலி ஊடகநிலையமொன்று தனது உத்தியோக பூர்வ இணைய தளமொன்றில் அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டிருந்தது.

i. தகவலின் அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii. வானொலி ஊடகத்திற்கான பிரதி எழுதும்போது கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்களினை சுருக்கமாக விபரிக்குக.

iii. வானொலி நிறுவனமொன்று உத்தியோகபூர்வ இணையதளம் ஒன்றினைப் பயன்படுத்துவதனால் அதற்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் மூன்றினை விபரிக்குக.

iv. வானொலி நிகழ்ச்சியில் நான்கு வகைகளினை பெயரிட்டு அவற்றின் இயல்புகளினை சுருக்கமாக விபரிக்குக.

*5.*

i. சுவர்ச் செய்திப் பத்திரிகையில் பயன்படுத்தக்கூடிய காட்சி வெளியீட்டு விதிகள் இரண்டினைப் பெயரிடுக.

ii. இணைந்த ஊடகவியலின் அல்லது ஊடகக் குவிகை ஒன்றினைவை எதிர்நோக்குவதில் ஊடகவியலாளர்கள் கொண்டுள்ள சவால்கள் இரண்டினை பெயரிடுக.

iii. வீதி விபத்துக்களினை குறைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கட்புலத் தொடர்பாடல் வகைகள் மூன்றினை விபரிக்குக.

iv. தற்காலத்தில் புகைப்படத்துறையின் முன்னேற்றகரமான தொழினுட்பமாக இலக்கமுறைப் புகைப்படக் கலை (Digital Photography) விளங்குகின்றது. அந்த வகையில் இலக்கமுறை புகைப்படக் கலையை பயன்படுத்துவதன் நான்கு காரணங்களை விவரிக்குக.

**6.**


i. ஊடக சுதந்திரத்தன்மை தொடர்பாக கருத்துருவாக்கங்களினை முன்வைத்த மேலைத்தேய நிபுணர்கள் இருவரைப் பெயரிடுக.

ii. ஊடகத்தின் பால் துலங்கல்களினை வெளிக்காட்டும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டினை குறிப்பிடுக.

iii. வெகுசன ஊடகங்களினால் பெறுநருக்கு கிடைக்கும் பயன்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக.

iv. பெறுநர்களை ஊடகச் செய்திகள் தொடர்பாக அவர்கள் செயற்படுகின்ற விதங்களுக்கு அமைவாக இரண்டு தொகுதிகளாக பிரித்துக் காட்ட முடியும். அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

**7.** பின்வரும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.




i. இருவழித் தொடர்பாடலை மேற்கொள்வதற்கான, ஆனால் மேற்படி வரைபடத்தில் இடம்பெற்றிராத அம்சம் எது?

ii. R இனை இலங்கையினூடாக தேசிய செய்திப்பத்திரிகை எனநீர் கருதினால் அதற்கெனப் பிரயோ கிக்கக்கூடிய இரண்டு ஒழுக்க நெறிக் கோவைகளினைப் பெயரிடுக.

iii. Q ஆனது உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் ஒளிபரப்பப்படும் விளம்பரச் செய்திகளை பிரதித்துவம் செய்வதாக கொள்க. அவ்வாறான தொலைக்காட்சி விளம்பர செய்திகளின் பிரதிகூலங்கள் மூன்றினை விபரிக்குக.

iv. R இணைத் தொலைக்காட்சி ஊடகமாக கருதினால் அவ்வூடகத்தின் நான்கு இயல்புகளை விளக்குக.

***